# குடிமையியல்

## 1. மாநில அரசு




இந்தியா 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களைக் கொண்டுள்ளது. டெல்லி தேசிய தலைநகர் ஆகும். மாநில அரசின் கட்டுப்பாட்டில் மாநிலம் செயல்படுகிறது. யூனியன் பிரதேசங்கள் துணை நிலை ஆளுநர் மூலம் (லெப்ட்டினண்ட் கவர்னர்) குடியரசுத் தலைவரால் நிர்வகிக்கப்படுகிறது.

1991–ம் ஆண்டு அரசியலமைப்பு 69வது சட்டத் திருத்தத்தின்படி, டெல்லி தேசிய தலைநகர் நிலையைப் பெற்றது.

மாநில அரசின் அதிகாரங்களையும், பணிகளையும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தெளிவாக விளக்குகிறது. மாநிலப் பட்டியலில் இடம் பெற்றுள்ள துறைகளை நிர்வகிக்கும் பொறுப்பு மாநிலங்களைச் சாரும். மைய அரசு போன்று மாநில அரசுகளும் சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**செயல்பாடு**

நமது அரசியலமைப்பில் மாநில பட்டியல் தவிர மற்ற இரண்டு பட்டியல்கள் பற்றி உமக்குத் தெரியுமா ?




இந்திய அரசியலமைப்புச் சட்டம் 152 முதல் 237 வரை உள்ள சட்டப்பிரிவுகள் மாநில அரசின் நிர்வாகப் பணிகளைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடுகிறது. அரசியலமைப்பின் 153 முதல் 160வரையிலான பிரிவுகள் ஆளுநர்களின் நியமனம், தகுதி, அதிகாரம் மற்றும் பணிகள் பற்றி விளக்குகின்றன.

**செயல்பாடு**

அதிகாரங்கள் பிரிக்கப்பட வேண்டுமா ? அல்லது ஏதாவது ஒரு துறை அனைத்து விவகாரங்களையும் கண்காணிக்க வேண்டுமா ? என்பது பற்றி நீ கருதுவது யாது ?

### நிர்வாகத்துறை

மாநில நிருவாகம் ஆளுநர், முதலமைச்சர், மற்றும் அமைச்சரவையைக் கொண்டுள்ளது.

மாநில நிர்வாகம் → ஆளுநர் → முதலமைச்சர் → அமைச்சரவை

**செயல்பாடு**

நிர்வாகத்துறையின் கீழ் உள்ளவை யாவை ?

### ஆளுநர்

மாநில நிர்வாகத்துறை ஆளுநரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசின் தலைவர் இவரே. ஆனால் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவையே உண்மையான நிர்வாக அமைப்பாகும். இந்த அமைச்சரவை மாநிலசட்டப் பேரவைக்கு பொறுப்பானதாகும்.



ராஜ்பவன், சென்னை

### ஆளுநர் நியமனம்

இந்தியக் குடியரசுத் தலைவர், மாநில ஆளுநரை நியமனம் செய்கிறார். இவரை ஒரு மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்திற்கும் குடியரசுத் தலைவர் மாற்றம் செய்யலாம். உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் முன்பு ஆளுநர் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்கிறார்.

### தகுதிகள்

- ⇨ இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- ⇨ 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- ⇨ நாடாளுமன்றத்திலோ, சட்ட மன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பாரேயானால் அப்பதவியைத் துறக்கவேண்டும்
- ⇨ மத்திய மற்றும் மாநில அரசில் எந்தப் பதவியிலும் ஊதியம் பெறுபவராக இருக்கக் கூடாது.
- ⇨ ஆளுநராக நியமிக்கப்படுபவர், நியமிக்கப்படும் மாநிலத்தைச் சார்ந்தவராக இருக்கக்கூடாது.

### பதவிக்காலம்

பொதுவாக ஆளுநரின் பதவிக் காலம் 5 ஆண்டுகள். ஆனால் குடியரசுத் தலைவர் விரும்பும் வரையில் அவர் பதவியில் நீடிக்கலாம். குடியரசுத் தலைவர், பதவிக்காலம் முடியும் முன்பே, ஆளுநரைப் பதவியிலிருந்து நீக்கலாம் அல்லது பதவி நீட்டிப்பு செய்யலாம். ஆளுநரே தனது பதவியிலிருந்தும் விலகலாம். இவருக்கு எதிராக குற்றத் தாக்கல் பற்றிய விவரம் அரசியலமைப்பில் குறிப்பிடப் படவில்லை.

**செயல்பாடு**

தமிழ்நாட்டில் பதவி வகித்த முதல் பெண் ஆளுநர் பெயரை குறிப்பிடு ?

### ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

அரசியலமைப்புச் சட்டம் 164–வது பிரிவின்படி, மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்ட கட்சியின் தலைவரை முதலமைச்சராகவும், அவரின் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்களையும், ஆளுநர் நியமனம் செய்கிறார். மேலும் மாநில அரசின் தலைமை வழக்கறிஞரையும், அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவரையும், மற்ற உறுப்பினர்களையும், பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களையும் நியமனம் செய்கிறார்.

மாநில அரசின் செயல்பாடு குறித்து குடியரசுத் தலைவருக்கு அறிக்கைகள் அனுப்புகிறார். மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும்போது, மாநில நிர்வாகத்தை நேரடியாக மேற்கொள்கிறார்.

மாநில சட்ட மன்றத்தில் ஒரு அங்கமாக ஆளுநர் திகழ்கிறார். மாநில சட்டமேலவை (இரண்டாவது அவை) உறுப்பினர்களில் 1/6 பகுதியினரையும், சட்டப்பேரவையில் ஒரு ஆங்கிலோ–இந்திய உறுப்பினரையும் நியமனம் செய்கிறார். மாநில சட்டமன்றம் நிறைவேற்றும் எந்தவொரு மசோதாவும் ஆளுநரின் ஒப்புதல் பெற்றப் பின்னரே சட்டமாகும். சட்டப் பேரவை நடைபெறாத சமயங்களில், அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கும் அதிகாரம் உண்டு. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து , மாநில அரசு செயல்படமுடியாத நிலையில், அரசியலமைப்பு சட்டப் பிரிவு, 356–ஐ பயன்படுத்தி மாநில அரசை கலைத்து, குடியரசு தலைவர் ஆட்சியை பிரகடனம் செய்யலாம். இச்சூழ்நிலையில் ஆளுநர் மாநிலத்தில் உண்மையான அதிகாரம் பெற்றுத் திகழ்கிறார். இது குடியரசுத்தலைவர் ஆட்சி என்றழைக்கப்படுகிறது.

**செயல்பாடு**

அவசரச் சட்டங்கள் என்றால் என்ன ?

சட்டமன்றங்கள் நடைபெறாத சமயங்களில், ஆளுநரால் பிறப்பிக்கப்படும், சட்டங்கள் அவசரச் சட்டங்கள் என்றழைக்கப்படுகின்றன. இச்சட்டங்கள் சட்டமன்றங்களால் பிறப்பிக்கப்படும் சட்டங்களைப் போன்றவை. ஆனால் இச்சட்டங்களுக்கு 6 வாரத்திற்குள் மாநில சட்டமன்றங்களின் ஏற்பை பெறவேண்டும்.

ஆளுநர் அனுமதியின்றி, நிதி மசோதாக்களை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது. துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் ஆளுநரின் பரிந்துரையின் பேரில்தான் சட்ட மன்றத்தில் கொண்டு வர முடியும். மாநில அரசின் ஆண்டு வரவு–செலவு திட்டம் ஆளுநரின் அனுமதி பெற்ற பின்னரே சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவுகளை மேற்கொள்ள சில்லரை செலவு நிதியிலிருந்து நிதி வழங்கிட அரசியலமைப்புச் சட்டம் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

முதலமைச்சர் மற்றும் அமைச்சரவை ஆலோசனை பேரில், குற்றவியல் நடைமுறை சட்டத்தின்படி, மாநில உயர்நீதி மன்றத்தால் தண்டனை பெற்ற குற்றவாளிகளை மன்னிக்கவும், தண்டனையைக் குறைக்கவும் அல்லது நீக்கவும் ஆளுநர் அதிகாரம் பெற்றுள்ளார். எனினும் தண்டனையை அதிகப் படுத்த அதிகாரங்கள் பெற்றிருக்கவில்லை. மாநில அரசுப் பணி ஆணையத்திடமிருந்து ஆண்டு அறிக்கைகளை பெற்று, சட்டமன்றத்தின் பரிசீலனைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கின்றார்.

## முதலமைச்சர் மற்றும் அமைச்சரவை

### முதலமைச்சர்

மாநிலத்தில் உண்மையான நிர்வாக அதிகாரங்களை செயல்படுத்துவது முதலமைச்சர் மற்றும் அவரது தலைமையிலான அமைச்சரவையாகும். ஆளுநரின் பெயரால் மாநில நிர்வாகத்தை முதலமைச்சர் மேற்கொள்கிறார். மைய அரசில் பிரதமரின் நிலை போன்றே மாநில நிர்வாகத்தில் முதலமைச்சர் நிலை காணப்படுகிறது.

### முதலமைச்சர் நியமனம்

மாநில முதலமைச்சர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார். சட்டப் பேரவையில் எந்தக் கட்சி அல்லது எந்த அணி பெரும்பான்மை பெற்றுள்ளதோ, அந்தக் கட்சியின் தலைவர் அல்லது அணியின்

தலைவரை ஆளுநர் முதலமைச்சராக நியமிக்கிறார். எந்தவொரு கட்சியும் அல்லது அணியும் சட்டப் பேரவையில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லையெனில், சட்டசபையில் தனிப்பெரும் கட்சியின் தலைவருக்கு அமைச்சரவை அமைக்குமாறு ஆளுநர் அழைப்பு விடுக்கலாம். ஆனால் ஆளுநர் குறிப்பிடும் கால அவகாசத்திற்குள், சட்டப் பேரவையில் தனக்குப் பெரும்பான்மை ஆதரவு உள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும். முதலமைச்சரின் பதவிக்காலம் நிர்ணயிக்கப்பட்ட தனது சட்டப் பேரவையில் பெரும்பான்மையினர் தனக்கு ஆதரவு கொடுக்கும் வரையில் ஒருவர் பதவியில் இருக்கலாம். முதலமைச்சரின் பதவி விலகல் ஒட்டுமொத்த அமைச்சரவையின் விலகலாகும். பொதுவாக முதலமைச்சருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

### முதலமைச்சரின் பணிகளும், அதிகாரங்களும்

மாநில நிருவாகத்தின் உண்மையான தலைவராக முதலமைச்சர் திகழ்கிறார். அவரின் பணிகளாவன :

1) அமைச்சரவையை அமைத்தல்.

2) அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்வது.

3) கடமை தவறும் போது அமைச்சர்களை பதவி விலகக் கோருதல்.

4) ஆளுநர் அறிவிக்கையின்படி, துறைகளை அமைச்சர்களுக்கு மாற்றம் செய்வது.

5)அமைச்சரவையின் தலைவராய் இருந்து, அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவது.

6) ஆளுநர்மற்றும் அமைச்சர்களுக்கு இடையே தொடர்பாளராக செயல்படுதல்.

7) பதவிக்காலம் முடியும் முன்பே சட்டப் பேரவையைக் கலைக்க ஆளுநருக்கு பரிந்துரைப்பது.

### அமைச்சரவைக் குழு

மைய அமைச்சரவைப் போன்றே மாநில அமைச்சரவையும் உண்மையான அதிகாரம் பெற்றுள்ளது. மாநில அமைச்சரவை மாநில சட்டமன்றத்திற்கு பொறுப்புடையதாகும். அனைத்து அமைச்சர்களும் மாநில சட்ட மன்றத்தின் உறுப்பினர்களாய் இருத்தல் வேண்டும். அமைச்சராக நியமிக்கப்படும்போது சட்டமன்ற உறுப்பினராய் இல்லாதவர்கள், 6 மாத காலத்திற்குள் சட்ட மன்ற உறுப்பினர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அனைத்து அமைச்சர்களும், முதலமைச்சரின் தலைமையின் கீழ் ஒரே அணியாகச் செயல்படுகின்றனர். முதலமைச்சர் பதவியில் நீடிக்கும் வரை அமைச்சரவை பதவியில் நீடிக்கும். சட்டப் பேரவை அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றினால், முதலமைச்சர் தலைமையில் செயல்படும் மாநில அமைச்சரவை பதவி விலக வேண்டும். இது ஒட்டுமொத்தப்பொறுப்பு என்றழைக்கப்படுகிது.

### சட்டப் பேரவை

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சட்டப்பேரவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மையான மாநிலங்களில் ஓர் அவைக் கொண்டசட்டப்பேரவைகளும், சில மாநிலங்களில் ஈரவை கொண்ட சட்ட மன்றங்களும் கீழ் அவை, மேல் அவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.


(உ.ம்) பீகார், கர்நாடகம், மகாராஷ்டிரம், உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீர்.



தமிழ்நாடு சட்டப்பேரவை

இரு சபைகள் கொண்ட மாநிலங்களில் சட்டமன்றமும் சட்ட மேலவையும் செயல்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஆசிரியர்கள், பட்டதாரிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

1988–ம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் 61–வது திருத்தத்தின் படி வாக்குரிமை வயது 21–லிருந்து 18–ஆக குறைக்கப்பட்டது.




## சட்டப் பேரவை (கீழ் அவை)

மாநிலங்களில் சட்டப் பேரவை உண்மையான அதிகார மையமாகத் திகழ்கிறது. இது குடிமக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் எண்ணிக்கை அமைந்திருக்கும். அதிக பட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 500 ஆகும். குறைந்த பட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 60 ஆகும். சட்டப் பேரவையில் , தாழ்த்தப் பட்டவர்கள் (ஆதி திராவிடர்), பழங்குடியினருக்கு சில இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை தனித்தொகுதி என அழைக்கப்படுகின்றன. 25 வயது நிறைவடைந்தவர்கள் தேர்தலில் பங்கேற்கலாம்.சட்டப்பேரவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். இருப்பினும், பதவிக்காலம் முடியும் முன்பே கூட இப்பேரவையைக் கலைக்கலாம்.

**செயல்பாடு**

தமிழ்நாட்டின் சட்ட பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அறிக.

## சபாநாயகர்

சட்டப் பேரவைக்கு தலைமை வகிப்பவர் அவைத் தலைவர் அல்லது சபாநாயகர். சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் சட்டப்பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சபாநாயகர் இல்லாத நாட்களில் துணை சபாநாயகர் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை நடத்துகிறார். சட்டப் பேரவையை முறைப்படி நடத்தும் பொறுப்பு (சபா நாயகர்) சட்ட பேரவைத் தலைவருடையதாகும்.

**தெரிந்துகொள்**

தமிழ்நாட்டின் தற்போதைய சட்டப்பேரவை தலைவர் யார் ?

## சட்ட மேலவை (மேலவை)

மத்திய சட்டமேலவையான மாநிலங்களவை போன்றே, மாநிலங்களில் சட்டமேலவை நிரந்தரமானதாகும். ஆனால் மாநில சட்ட மன்றங்களின் பரிந்துரைபேரில் பாராளுமன்றத்தால் இது கலைக்கப்படலாம். சட்டமேலவை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒய்வுப் பெறுகின்றனர். இந்த இடங்களுக்கு தேர்தல் மூலமாகவோ அல்லது ஆளுநரின் நியமனம் மூலமாகவோ அடுத்த 6 ஆண்டு காலத்திற்கு உறுப்பினர்கள் நிரப்பப்படுகின்றனர்.

சட்டமேலவை அங்கத்தினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுவதில்லை.இவர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள். உறுப்பினர்கள் மறு தேர்தலுக்கும், மறு நியமனத்திற்கும் தகுதி உள்ளவர்கள். சட்ட மேலவை உறுப்பினர்கள் எண்ணிக்கை மொத்த மாநில சட்டமன்ற உறுப்பினர்களின்

எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் இருக்கக்கூடாது. ஆனால் மொத்த உறுப்பினர்கள் 40–க்கு குறையாமல் இருக்க வேண்டும்.

**தெரிந்து கொள்**

30 வயது நிரம்பிய இந்திய குடிமக்கள் சட்டமேலவை உறுப்பினராக தகுதி படைத்தவர் ஆவார்.

## தேர்ந்தெடுக்கும் முறை

⇨ 1/3 உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

⇨ 1/12 உறுப்பினர்கள் மாநில பல்கலைக் கழகப் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

⇨ 1/12 உறுப்பினர்கள் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

⇨ 1/3 உறுப்பினர்கள் சட்டப் பேரவையினால் தேர்வு செய்யப்படுகின்றனர்.

⇨ 1/6 இலக்கியம், கலை, அறிவியல், சமூகச் சேவை போன்ற துறைகளில் சிறப்பு அறிவும், நடைமுறை அனுபவம் உள்ளவர்களை ஆளுநர் நியமனம் செய்கிறார்.

1986, நவம்பர் 1ஆம் தேதி சட்டமேலவை தமிழ்நாட்டில் ஒழிக்கப்பட்டது.

## சட்ட மேலவைத் தலைவர்

சட்ட மேலவையை நடத்துபவர் மேலவைத்தலைவர் (chair person) ஆவார். மேலவைத்தலைவர், மேலவை துணைத் தலைவர் ஆகியோர் மேலவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேலவைத்தலைவர் இல்லாத காலங்களில் மேலவைத் துணைத் தலைவர் மேலவை நிகழ்ச்சிகளை நடத்துவார்.

**செயல்பாடு**

சட்டமேலவை, சட்டப்பேரவை ஆகிய இரண்டில் எது அதிக அதிகாரம் கொண்டது ? ஏன் ?

## சட்டமன்றத்தின் பணிகள்

மாநில சட்ட மன்றம், மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியலில் உள்ள துறைகளுக்கு தேவையான சட்டங்களை இயற்றுகிறது. பாராளுமன்றத்தில் ஒரு மசோதா சட்டமாவதற்கு மேற்கொள்ளப்படும் முறையே, மாநில சட்ட மன்றங்களிலும் கையாளப்படுகிறது. மாநிலத்தின் நிதி சார்ந்த செயல்களை சட்டப்பேரவை கட்டுப்படுத்துகிறது. சட்டமன்றத்தின் அனுமதியின்றி புதிய வரிகளை விதிக்க முடியாது. சட்ட சபைக்கு அமைச்சரவை பொறுப்பு உடையதும் கட்டுப்படுவதும் ஆகும். மேலவையை விட சட்ட பேரவை அதிகாரமிக்கது. நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு சட்டமன்றத்தில் (கீழவை) மட்டுமே அறிமுகப்படுத்தப்படுகிறது.

நிதிமசோதா கொண்டுவரும்போது மைய அரசில் பின்பற்றும் முறையே பின்பற்றப்படுகிறது. ஐந்து நிலைகளாக மூன்று முறை படிக்கப்பட்டபின், ஆளுநரின் அனுமதியுடன் இது சட்டமாகும். சட்ட மன்ற அவையின் நடவடிக்கைகளுக்கு அமைச்சர்கள் பொறுப்பாவார்கள். பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிக்கவேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டால், அமைச்சரவை கலைக்கப்படும். நிர்வாகம் சட்ட மன்ற நிகழ்வுக்குக் கடமைப்பட்டுள்ளது.

**செயல்பாடு**

சட்ட மன்றத்தில் கேள்வி நேரம் என்பது என்ன ? இது தேவையா ?

மாநில நிர்வாகம், உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இக்குழுவில் இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள், இந்தியக் காவல் பணி அலுவலர்கள் மற்றும் மாநில அரசுப் பணியாளர்கள் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட சார்நிலைப் பணியாளர்கள் ஆகியோர் அடங்குவர்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இந்தியா __________ உள்ளடக்கியது.

   அ) 26 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள்

   ஆ) 24 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள்

   இ) 27 மாநிலங்கள் மற்றும் 5 யூனியன் பிரதேசங்கள்

   ஈ) 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள்

2. மாநில நிருவாகத்தின் தலைவர்.

   அ) முதல் அமைச்சர் ஆ) குடியரசுத் தலைவர்

   இ) பிரதம மந்திரி ஈ) ஆளுநர்

3. ஆளுநரை நியமிப்பவர்

   அ) அமைச்சரவை ஆ) அமைச்சர்கள்

   இ) முதல்அமைச்சர் ஈ) குடியரசுத் தலைவர்

4. முதலமைச்சரையும் மற்றும் மற்ற அமைச்சர்களையும் நியமிப்பவர்.

   அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர் இ) ஆளுநர் ஈ) நீதிபதி

5. அவசர சட்டங்களை வெளியிடுபவர்.

   அ) மாநில சட்டமன்றம் ஆ) முதலமைச்சர் இ) பிரதம மந்திரி ஈ) ஆளுநர்

### ஆ. குறுகிய அளவில் விடையளி.

1. இந்தியாலுள்ள மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்கள் எண்ணிக்கைகள் யாவை ?
2. இந்தியாவின் தலைநகர் யாது ?
3. அமைச்சரவை எவ்வாறு அமைக்கப்படுகிறது ?
4. “கூட்டு பொறுப்புணர்வு ” என்றால் என்ன ?
5. மாநில சட்டமன்றத்தின் கடமைகள் யாவை ?

### இ. பத்தியளவில் விடையளி.

1. ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் யாவை ?
2. முதலமைச்சரின் முதன்மைப் பணிகள் யாவை ?
3. அமைச்சரவையின் அமைப்பு மற்றும் கடமைகள் குறித்து விளக்குக.
4. சட்ட மேலவையின் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் ?

## உருவாக்க மதிப்பீடு

1. பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சர் வழங்கியுள்ள திட்டங்கள் பற்றிய சுருள் அட்டவணை தயாரித்தல்.
2. தமிழக முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்களின் படத் தொகுப்பு தயாரித்தல் 1950–2012.
3. தமிழக முதலமைச்சரின் சிறப்பு மிகு திட்டங்கள் பற்றிய ஒப்படைப்பு தயாரித்தல்.
4. மைய அரசு, மாநில அரசு மற்றும் தனியார் துறையின் கீழ் இயங்கும் துறைகளை அட்டவணையிடு.
5. மாணவர்கள் பெறும் நலத்திட்டங்கள் பற்றி குழு விவாதம் செய்தல்.
6. “இளைஞர்களுக்கு தலைவர்களின் பொறுப்புகள் என்ன” – பட்டிமன்றம் நடத்துதல்.
7. சமுதாயத்திற்கும், பள்ளிக்கும் மாணவர்களின் கடமைகள் பற்றி பேச்சுப்போட்டி.
8. தமிழக சட்டசபையை பார்க்க மாணவர்களை அழைத்து செல்லல்
9. தொலைக்காட்சி நிகழ்ச்சி வழியாக சட்டசபை நிகழ்ச்சியை காணச் செய்தல்.

# 2. குடிமக்களின் உரிமைகளும் கடமைகளும்


இந்திய அரசியலமைப்பை வகுத்துக் கொடுத்தவர்கள், மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு அங்கீகாரம் தேவையென்பதை உணர்ந்து, அவற்றை அரசியல் மற்றும் சட்டரீதியான நடவடிக்கையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று கருதி உருவாக்கியதே குடிமக்களின் உரிமைகளும் கடமைகளும் ஆகும். இத்தகைய உரிமைகளுக்கு அரசியலமைப்பு மூலம் உத்திரவாதம் அளிக்கப்பட்டு, ஜனநாயக முறை காக்கப்படவேண்டும் எனக் கருதி அரசியலமைப்பை உருவாக்கிய சிற்பிகள், இந்திய அரசியலமைப்பின் மூன்றாம் பகுதியில் தனித் தலைப்பில் இதனை வரையறுத்துள்ளனர்.

உரிமைகளின்றி பொறுப்பற்றத் தன்மையில் செயல்படும் போது, ஒழுங்கின்மைக்கும், கட்டுப்பாடற்ற தன்மைக்கும் நாட்டை இட்டுச் செல்லும். எனவே, 1976ஆம் ஆண்டு 42–வது அரசியலமைப்புத் திருத்தம் நான்காம் பகுதியில் தனித்தலைப்பில் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பை வடிவமைத்துக் கொடுத்தவர்கள், அரசியலமைப்பு அடிப்படையில், சமூக நலத்தை பேணிக் காப்பதற்காக, ஆட்சியாளர்கள் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை வரையறுத்துள்ளனர். இவை அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் பகுதி IVஇல் கொடுக்கப்பட்டுள்ளது. பகுதி III, IV, மற்றும் IV A ஆகிய மூன்று பகுதிகளும் ஒரு ஜனநாயக நாடு உருவாக அடிப்படையாக உள்ளன.

## அடிப்படை உரிமைகள்

இந்திய அரசியலமைப்பு மூன்றாவது பகுதியில், அரசியலமைப்பின் சட்ட பிரிவு 12 முதல் 35 வரை உள்ள பிரிவுகள் சில உரிமைகளை அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கின்றது. அவை

1. சமத்துவ உரிமை – பிரிவு 14 – 18 வரை
2. சுதந்திர உரிமை – பிரிவு 19 – 22 வரை
3. சுரண்டலுக்கெதிரான உரிமை – பிரிவு 23 – 24 வரை




4. சமய சுதந்திர உரிமை – பிரிவு 25 – 28 வரை
5. பண்பாடு மற்றும் கல்வி உரிமை – பிரிவு 29 – 30 வரை
6. அரசியலமைப்பிற்கு தீர்வு காணும் உரிமை – பிரிவு 32

## சமத்துவ உரிமை

சட்டத்தின் முன் அனைவரும் சமம். எனவே சட்ட ரீதியாக, அனைவரும் சமமாக பாதுகாக்கப்பட வேண்டும். நமது அரசியலமைப்பு அனைத்து குடிமக்களின் சமத்துவ உரிமைக்கு உத்திரவாதம் அளிக்கிறது. கீழ்க்கண்ட உரிமைகள் சமத்துவ உரிமைகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1. சமயம், சாதி, பால், இனம் மற்றும் நிறம் அடிப்படையில் எவரையும் வேறுபடுத்தக்கூடாது–(சரத்து 15).

2. பொதுப்பணி மற்றும் வேலைவாய்ப்பு நியமனங்களில் சமவாய்ப்பு அளித்தல்–(சரத்து 16).

3. தீண்டாமை ஒழிப்பு – சமுதாயத்தில் பின் தங்கிய பிரிவினர்களின் நலனைப் பாதுகாத்தல் – (சரத்து 17).

4. இராணுவம் மற்றும் கல்வி தவிர அரசு அனுமதியின்றி பெரும் பிற பட்டங்களை தடைசெய்தல்–(சரத்து 18)

## சுதந்திர உரிமை

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 19 – அதன் குடிமக்களுக்கு ஆறு வகையான உரிமைகளை வழங்குகின்றது. அவையாவன:

1. பேச்சு மற்றும் கருத்துக்களை வெளியிடும் உரிமை.

2. ஆயுதமின்றிக் கூட்டங்களை அமைதியாக நடத்தும் உரிமை.

3. சங்கங்கள் மற்றும் கழகங்கள் ஏற்படுத்தும் உரிமை .

4. இந்தியாவின் எந்த பகுதிக்கும் செல்லும் உரிமை.

5. இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வாழும் உரிமை.

6. ஒருவர் எந்தத் தொழிலையும் அல்லது பணியையும் மேற்கொள்ளும் உரிமை

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 20–ன்படி ஒருவரைத் தகுந்த காரணமின்றி கைது செய்வதற்கு தடை விதிக்கிறது. மேலும் ஒரே குற்றத்திற்காக ஒருமுறைக்கு மேல் தண்டிக்கக்கூடாது என்றும் அறிவுறுத்துகிறது. யாரையும் சுய விருப்பின்றி சாட்சியாக்க கட்டாயப்படுத்தக்கூடாது.

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு–21 தனி மனித வாழ்வு மற்றும் தனி மனித சுதந்திரத்தை உறுதி செய்கிறது. தனது சுதந்திரத்தினை, மற்றவர்களின் சுதந்திரம் பாதிக்கப்படாத வகையில் அனுபவிக்கவேண்டும்.

இந்தியஅரசியலமைப்பு சட்டப்பிரிவு 22–ன்படி எவரையும் விசாரணையின்றி கைது செய்யக்கூடாது. மேலும் மக்களை விசாரணையின்றி கைது செய்யப்படும் போது, பாதுகாப்பு அளிப்பதோடல்லாமல் கைது செய்வதற்கான காரணத்தைத் தெரிவிக்கும்படி கேட்கவும் உரிமையை அளிக்கிறது. சட்ட வல்லுநர்களை கலந்தாலோசிக்கவும், கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் கிரிமினல் வழக்குகளில் நீதிபதி முன் ஆஜர்படுத்தவும் பாதுகாப்பு அளிக்கிறது.

## சுரண்டலுக்கு எதிரான உரிமை

ஒருவரை கட்டாயமாகவோ அல்லது ஊதியமின்றியோ வேலை செய்ய வைத்தல் கூடாது என்று இந்திய அரசியலமைப்பு 23வது பிரிவு கூறுகிறது. அடிமைமுறை, பெண்களையோ குழந்தைகளையோ மனித வியாபாரத்திற்கு தவறான முறையில் பயன்படுத்தக் கூடாது. மாற்றுத்திறன் உடையவர்களையும் (ஊனமுற்றோர்) பயன்படுத்தக்கூடாது. 14 வயதிற்குகீழ் உள்ள குழந்தைகளை தொழிற்சாலை மற்றும் சுரங்கத் தொழிலில் அல்லது பாதுகாப்பற்ற பணிகளில் ஈடுபடுத்துவதைத் தடைச் செய்ய பிரிவு 24 , வழி செய்கிறது.



**சமய சுதந்திர உரிமை**

நமது அரசியலமைப்பு இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமய சுதந்திரத்தினை அளிக்கிறது. எல்லா சமயங்களையும் ஒரே மாதிரியாகக் கருத



வேண்டும். இந்தியா சமய சார்பற்ற நாடு என்பதால் அரசுக்கு தனிமதம் இல்லை. அனைத்து சமய அமைப்புகளும் தங்களது விவகாரங்களை நிர்வகித்துக் கொள்ள சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. பிரிவு 25–இல் மத்தைப் பின்பற்றவும் பரப்புவதற்கான சுதந்திரமும் உண்டு என்று உத்திரவாதம் அளிக்கின்றது.

பிரிவு 26, மதச்சார்பான நிறுவனங்களை நிறுவவும், நடத்தவும், தர்மப்பணிகளை மேற்கொள்ளவும் உறுதியளிக்கிறது. குறிப்பிட்ட சமயத்தின் பராமரிப்பிற்கும், வரி செலுத்துவதற்கும் பிரிவு 27 உரிமையை வழங்குகிறது.

அரசியலமைப்பு பிரிவு 28 கல்வி நிறுவனங்களில் எந்தவிதமான சமயப் போதனைகளையோ, அல்லது வழிபாட்டையோ மத நிறுவனங்களைத் தவிர அரசு நிதிபெறும் கல்வி நிறுவனங்கள் பின்பற்றக் கூடாது.

**பண்பாட்டு, கல்வி உரிமைகள்**

இந்தியா பல மொழிகள், எழுத்துக்கள் மற்றும் பண்பாடுகளைக் கொண்ட நாடு. அரசியலமைப்பு பிரிவு 29–ன்படி சிறுபான்மையினர் மொழி, எழுத்து பண்பாட்டைப் பாதுகாக்கிறது. பிரிவு–30 சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவவும் மற்றும் நிர்வகிக்கவும் உரிமை அளிக்கிறது.

**அரசியலமைப்பிற்கு தீர்வு காணும் உரிமை**

நமது அரசியலமைப்பு பிரிவு 32 குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது, நேரிடையாக மக்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து பாதுகாப்பினைப் பெற உதவுகிறது. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றம் நீதி ஆணைகள், ஆட்கொணர் நீதிப் பேராணை, கீழ்மன்றத்திற்கு வரும் கட்டளை நீதிப் பேராணை, வழக்கு விசாரணைத் தடை ஆணை, உரிமை வினா நீதிப் பேராணை, பத்திரத்தைக் கொண்டு வந்து முன்னிலைப்படுத்தக் கீழ்மன்றங்களுக்கு இடப்படும் கட்டளை போன்ற நீதிமன்ற உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.

**செயல்பாடு**
கீழ்க்கண்ட வார்த்தைகளின் விளக்கம் பொருள் அறிக.
1. ஆட்கொணர் நீதிப்பேராணை
2. கட்டளை நீதிப்பேராணை.

**கல்வி உரிமை**

பிரிவு 21–A 2009 6 முதல் 14 வயதிற்குட்பட்டவர்களுக்கு இலவச கட்டாய கல்வி அளிக்க வகை செய்கிறது.

**அடிப்படைக் கடமைகள்**

1976ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 42–வது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தின்படி, இந்திய அரசியல் சட்டம் பகுதி IV-A பிரிவு 51–A இல் இந்திய குடிமக்களின் கடமைகளை வலியுறுத்துகிறது.

1. ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், அரசியல் சட்டம், தேசிய சின்னம், தேசியக் கொடி மற்றும் தேசிய கீதத்திற்கு மதிப்பு அளித்தல்.



2. சுதந்திரப் போராட்ட வீரர்களின் உன்னத உணர்வை நினைத்துப் பேணுதல்.

3. நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாத்தல்

4. நாட்டின் பாதுகாப்பிற்காகச் செயலாற்றுதல்.

5. மதம், மொழி, இனம், வகுப்பு வேற்றுமைகளைத் துறந்து, சகோதர உணர்வுடன் தேசிய ஒற்றுமை ஓங்கச் செய்தல்.

6. நம்முடைய பண்பாடு பன்முகப் பாரம்பரியக் கலாச்சாரத்தின் மேன்மையை மதித்தல்.

7. இயற்கை வளங்களையும், சுற்றுச் சூழலையும் பாதுகாத்து மேம்படுத்துதல்.

8. அறிவியல் மனப்பான்மை மற்றும் மனித நேயம் வளர்த்தல்.

9. பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.

10. தன்னுடைய முயற்சியினால் அனைத்துத் துறைகளிலும் தனிமனித மற்றும் கூட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

11. பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கல்வி பெறுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

## அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் அல்லது வழிகாட்டும் கோட்பாடுகள்

இந்திய அரசியலமைப்பு, நாட்டை வழிநடத்த அரசு நெறிமுறைக் கோட்பாடுகளை வழங்கியுள்ளது. பகுதி IV, 36 முதல் 51 வரை உள்ள பகுதியில் நெறிமுறைக் கோட்பாடுகள் என்ற அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் இடம் பெற்றுள்ளன.

அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் அனைத்து குடிமக்களுக்கும் போதுமான சமூக பொருளாதார குறிக்கோள் மூலம் சமூக நலனை உருவாக்குகிறது. பெரும்பான்மையான நெறிமுறை கோட்பாடுகள் இந்திய அரசியலமைப்பு முகவுரையில் குறிப்பிட்டுள்ள சமய, பொருளாதார நெறிகளை நிலைநாட்டுவதற்கு வழிகாட்டவல்ல கொள்கையாகத் திகழ்கிறது. மேலும் இக்கோட்பாடுகள் சமூக, பொருளாதார,

அரசியல், நீதி, கல்வி, நிர்வாகம், பண்பாடு சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. அரசு நெறிமுறை கோட்பாடுகள் மூன்று தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. அரசின் குறிக்கோள்கள்

2. அரசின் திட்டங்களை வடிவமைப்பது

3 அனைத்து குடிமக்களுக்கும் பாரபட்சமின்றி நேர்மையாக செயல்படுவது.

**மக்கள் நலனை அடைய அரசு பின்பற்றப் படவேண்டிய நெறிமுறைகள்**

1. சமூக, பொருளாதார அரசியல் நீதி பெறுவது.

2. அனைத்து அமைப்புகளிலும் மக்கள் நலனைக் காக்க, வருவாய் ஏற்றத் தாழ்வை நீக்க வேண்டும்.

3. ஆண், பெண் அனைவருக்கும் சமமான வேலைவாய்ப்பு மற்றும் சம ஊதியம் உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்காத வேலைவாய்ப்பு அளித்தல்

4. சமுதாய பொருள் வளங்களை, இயற்கை வளங்களை பொது நலனுக்காக நியாயமான முறையில் பங்கிடுதல்.

5. சர்வ தேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு சமூக உறவு உருவாக்குதல்.

**அரசு திட்டங்களைச் செயல்படுத்தும் நெறிமுறைகள்**

1. பொருளாதார உரிமைகளை பெறுதல்.

2. சமநீதியும், இலவச சட்ட உதவியும் அளித்தல்.

3. இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி அளித்தல்.

4. போதைப் பொருட்கள் மற்றும் மதுவை தடை செய்தல்.

5. குடிசைத் தொழில்களை ஊக்குவித்தல்.

6. நவீன முறையில் கால்நடைத்துறை, வேளாண்மைத் துறை அமைத்தல்.

7. கால்நடைகளை கொல்வதைத் தடை செய்தல்.

8. கிராம பஞ்சாயத்துக்களை உருவாக்கி அவை தன்னாட்சி அமைப்புகளாகச் செயல்படச் செய்தல்.

9. நலிவுற்ற பிரிவினரின் கல்வி மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.

10. சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்.

11. தேசிய நினைவு சின்னங்கள், இடங்கள், பொருட்கள் பாதுகாத்தல்.

12. நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறையை தனிமைப்படுத்துதல்.

**அரசு நெறிமுறைக் கோட்பாட்டின் தாக்கம்**

1. அடிப்படை வசதிகள் பெறுதல்.

2. ஆண், பெண் என்ற வேறுபாடின்றி சமவேலைக்கு சமஊதியம் பெறும் உரிமை.

3. பொருளாதார சுரண்டலுக்கெதிரான உரிமை.

4. குழந்தைகளையும், இளைஞர்களையும் சுரண்டலிலிருந்தும் ஒழுக்கக் கேடுகளிலிருந்தும் பாதுகாத்தல்.

5. சமநீதியும் இலவச சட்ட உதவியும் பெறச் செய்தல்.

6. பணிபுரிவதற்கான உரிமை.

7. வேலையற்றோர், முதியோர், பிணியாளர் ஆகியோருக்கு அரசு உதவி அளித்தல்.

8. மனிதாபிமானம் அமைந்த பணிச் சூழல்களை அமைத்து மகளிருக்கு மகப்பேறு உதவி அளித்தல்.

9. சீரான வாழ்க்கைத் தரத்தை பணியாளர்களுக்கு அமைத்தல்.

10. தொழில்களின் நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கேற்புக்கு வழி வகுத்தல்.

11. அனைத்து குழந்தைகளும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமை.

மேற்கண்ட அரசு நெறிமுறைக் கோட்பாடுகளை அரசு செயல்படுத்த வேண்டும். இவை சட்டத்தின் மூலமாக கட்டாயப்படுத்தக் கூடாது. இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளபடி செயல்படுத்த வேண்டும்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. குடிமக்களின் அடிப்படை கடமைகள் பற்றி விளக்கும் அரசியலமைப்புத்திருத்தம்

   அ) 42 ஆ) 45 இ) 48 ஈ) 52

2. அடிப்படை உரிமைகள்_______ தலைப்புகளில் பிரிக்கப்பட்டுள்ளது.

   அ) 8 ஆ) 5 இ)6 ஈ) 7

3. இந்தியா ஒரு _______ நாடு.

   அ) சமயசார்புள்ள ஆ) சமயசார்பற்ற இ) இந்து ஈ) கிறிஸ்தவ

4. சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை அனுமதிக்கும் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு

   அ) 40 ஆ) 30 இ) 50 ஈ) 60

5. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 19 குடிமக்களுக்கு _______ உரிமைகளை வழங்குகிறது.

   அ) 7 ஆ) 9 இ) 6 ஈ) 5

### ஆ. குறுகிய அளவில் விடையளி.

1. அடிப்படை உரிமைகளைபற்றி சுருக்கமாக வரைக.
2. மதச்சார்பான உரிமை என்றால் என்ன ?
3. நெறிமுறைக் கோட்பாடுகள் என்றால் என்ன ?
4. நீதிப் பேரானைகள் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

### இ. பத்தியளவில் விடையளி.

1. இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் உறுதி செயப்பட்டுள்ள அடிப்படை கடமைகள் பற்றி விவரி.
2. அரசு நெறிமுறைக்கோட்பாடுகளைப்பற்றி விளக்கு.

## உருவாக்க மதிப்பீடு

1. அடிப்படை உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன அல்லது மீறப்படுகின்றன என்பது பற்றி செய்தித் தாள்களில் வெளியான செய்திக் கட்டுரைகளை சேகரிக்கவும்.


2. “உரிமைகளும் கடமைகளும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்” இத் தலைப்பு குறித்து விவாதிக்கவும்.

# பொருளியல்

## 1. இந்திய ரூபாய் நோட்டு

### ரூபாய் நோட்டுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்

**நல்ல நோட்டா! கள்ள நோட்டா கண்டுபிடிக்க சில எளிய வழிகள்**




நல்ல நோட்டு





கள்ள நோட்டு

**1. காகிதம்**

| நல்ல நோட்டு | கள்ள நோட்டு |
|---|---|
| கூழாக்கப்பட்ட பருத்தியிலிருந்து தனித்தன்மை வாய்ந்த தாள் தயாரிக்கப்பட்டது, தொட்டுப் பார்த்து உணரலாம். எண்ணும்போது 'படபட'வென சத்தம் உண்டாகும். | சாதாரணக் காகிதம். எனவே, நோட்டைத் தொட்டுப் பார்த்து தடிமனையும், தரத்தையும் வைத்துக் கண்டுபிடித்துவிடலாம். |

## 2. வரிசை எண்கள்

புற ஊதா விளக்கொளியில் ஒளிரும் வண்ணம் ஒளிரும் மையினால் அச்சடிக்கப்பட்டுள்ளது. எண்களுக்கு இடையே உள்ள இடைவெளி ஒரே சீராக இருக்கும். எண்கள் சிவப்பு நிறத்தில் பெரிதாகப் பளிச்சென்று, தடிமனாக இருக்கும். 1000 ரூபாய் நோட்டில் மட்டும் வலது மேல் பாகத்தில் கருநீல நிறத்திலும், இடப்புறத்தில் கீழ்ப்பகுதியில் சிவப்பு நிறத்திலும் அச்சிடப்பட்டிருக்கும்.




அநேகமாக வரிசை எண்கள் சிறியதாக எண்களுக்கிடையே வெவ்வேறு விதமான அளவுகளில் இடைவெளியில் இருக்கலாம். புற ஊதா விளக்கொளியில் ஒளிராது.




## 3. நிறம் மாறும் மை

500, 1000 ரூபாய் நோட்டுக்களில் மத்தியில் அச்சிடப்பட்டிருக்கும் மதிப்பு இலக்கமான 500, 1000 பச்சை நிறத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கும். சற்றே சாய்த்துப் பார்த்தால் பச்சை நிறம் நீல நிறமாக மாறித் தெரியும்.

கள்ள நோட்டுகளில் பச்சை நிறம் நீல நிறமாகத் தெரிய வாய்ப்பில்லை. இவ்வழிமுறையில் ரூபாய் நோட்டு கள்ள நோட்டு என அறிந்து உறுதிப்படுத்தும் முறையில் மிக முக்கியமான வழிமுறை ஆகும்.

## 4. பாதுகாப்பு இழை

மகாத்மா காந்தி படத்திற்கு இடப்புறம் இருக்கும் பாதுகாப்பு இழை சாளரம் சாளரமாகத் தெரியும். வெளியில் பாதி தெரிந்தும், உள்ளே பாதி பொதிந்தும் இருக்கும். வெளிச்சத்தில் பார்த்தால் ஒரே கோடாகத் தெரியும். பாரத் என்று இந்தியிலும் RBI என்று ஆங்கிலத்திலும் மாறி மாறி அச்சடிக்கப்பட்டிருக்கும். 1000 ரூபாய் நோட்டில் கூடுதலாக மதிப்பிலக்கமான 1000 மும் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. 2005க்குப் பின்னர் அச்சடிக்கப்பட்ட நோட்டுகளில் பச்சையாகத் தெரியும் இழை வெவ்வேறு கோணங்களில் பார்க்கையில் நீல நிறமாகத் தெரியும். புற ஊதா விளக்கொளியில் மஞ்சளாக ஒளிரும். முன்பக்க எழுத்துகளும் ஒளிரும்.

வெள்ளி நிறப் பெயிண்ட் ஒட்டப்பட்டிருக்கலாம். வெளிச்சத்தில் பார்க்கும்போது ஒரே கோடாகத் தெரியாது. பாதுகாப்பு இழை போன்ற பொருளை ஒட்டியிருக்கிறார்கள். கறுப்புக் கோடு வரைந்து இருப்பார்கள். நோட்டை உன்னிப்பாகப் பார்த்தால் இது தெரியும். பாதுகாப்பு இழையில் நிறம் மாறும் தன்மை இருக்காது.

## 5. நீர்க்குறியீடு



ஒளி ஒதுக்க முறையில் மகாத்மா காந்தி உருவம் சினிமா ஸ்லைடு போல் தத்ரூபமாகத் தெரியும். நகலெடுக்க முடியாத பல்திசைக் கோடுகளும், மகாத்மா காந்தி உருவமும் நோட்டை வெளிச்சத்தில் பார்க்கையில் தெரியும். காகிதம் தயாரிக்கும் நிலையிலேயே நீர்க்குறியீடு ஏற்படுத்தப்படுகிறது.



அசலைக் காப்பியெடுக்கும் முயற்சியில் மகாத்மா காந்தி படம் வரையப்படுகிறது. மகாத்மா காந்தி படம் தெளிவாக இல்லாமல் கார்ட்டூன் படம் போல இருக்கலாம். நோட்டை வெளிச்சத்தில் பார்த்தால், இந்த வித்தியாசத்தை எளிதில் அறியலாம்.

## உருவாக்க மதிப்பீடு

1. நல்ல ரூபாய் நோட்டிற்கும், கள்ள ரூபாய் நோட்டிற்கும் உள்ள வேறுபாடுகளை எவ்வாறு கண்டுபிடிப்பீர்கள் ?

‘என்னால் முடியும், நான் செய்தேன்’

*( 'I can, I did' )*

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ. எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடுகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |